பாறைகளுக்கு சந்தை உள்ளது. ஜப்பானில் இதற்கு சந்தை அறவே கிடையாது. ஆகவே அவற்றை டெண்டர் முறையில் விற்பதற்கு முடியாது. பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் விலை நிர்ணயம் செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும். மேற்கு ஜெர்மனியில் திரு. ஆடம் டாக்கோ என்பவர்தான் முதன் முதலாக சாம்பல் நிறப்பாறைகளுக்குச் சந்தையை உருவாக்கிக் கொடுத்தவர் என்கிற குறிப்பையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள், இரயில் பெட்டித் தொழிற்சாலை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் உற்பத்தி செய்கிற மின்சக்தியை மாநில அரசே பயன் படுத்த வேண்டுமென்கிற கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். இரயில் பெட்டித் தொழிற்சாலை இங்கே அமையவிருந்த ஒன்று, பல்வேறு அரசியல் காரணங்களினால் வேறொரு மாநிலத்திற்குப் போய்விட்டதென்பதை நாம் அறிவோம். இதற்குப் பதிலாக தமிழகத்திற்கு வேறேதாவது ஒன்று கிடைக்கலாம் என்கிற எண்ணத்தில்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன், கடலூர் துறைமுகத்தை விரிவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடலூரில் சிப்காட் நிறுவனம் ஒரு பெரிய தொழிற்பேட்டையையே உருவாக்கியிருக்கிறது. அப்பகுதி நிலத்தின் விலையெல்லாம் உயர்ந்துகொண்டு வருகிறதென்று சொன்னார்கள். நிலத்தைப் பொறுத்தவரையில், கும்முடிப்பூண்டியானாலும் சரி, கடலூர் ஆனாலும் சரி . . . .

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

7. தகவல் கோரல்.

(2) அவையில் பொருட்களைக் காண்பிப்பது குறித்து.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, ஒரு "பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்". கூட்டுறவுத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடைபெற்ற நேரத்தில் தாங்கள் ஒரு தீர்ப்பு தந்தீர்கள். அதற்குள் நான் போகவில்லை. இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களும்—இங்கே இப்போது அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக எதிர்க் கட்சித் துணைத் தலைவர்

திரு. சாதிக் பாட்சா அவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் இருக்கிறார்கள்—எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு 'கெய்டுலைன்ஸ்' துணைத் தலைவரவர்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும். முன்பு கூட்டுறவுத் துறை கொள்கைக் குறிப்பு மீது மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் பேசும் போது அவர்கள் மெட்டியைக் காண்பித்ததற்காக, இங்கே நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினேன். அதற்கு தாங்கள் அதை இங்கே காட்டக் கூடாது என்று ரூலிங் கொடுத்தீர்கள். ஆனால் திரு. எல். கணேசன் அவர்கள் பேசும்போது, இங்கே கொடி, மற்றவைகளைக் காட்டினார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் எண்ணெயைக் கொண்டுவந்த நேரத்தில் அதற்காக வாதிடுகிறேன் என்று தயவுசெய்து துணைத் தலைவர் அவர்கள் கருதிக்கொள்ளக் கூடாது. ஒரு மரபு இருக்க வேண்டுமென்பதற்காகத் தெரிவிக்கிறேன். இனி எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தங்களுடைய அனுமதியைப் பெற்று பல பொருட்களை அவைக்குள்ளே கொண்டு வரலாமா என்பதை அவை முன்னவர் அவர்களும் சேர்ந்து முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலிலே உறுப்பினரவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பக்கூடாது; எதுவும் சம்பந்தம் இல்லாமல் கிளப்பக்கூடாது. திரு. கணேசன் அவர்கள் என்ன கொடியைக் காட்டினார் என்பது எனக்குத் தெரியாது. அப்போது யார் தலைமை வகித்தார்கள் என்பதும் தெரியாது. ஆகவே தலைமை வகித்தவர் அதற்கு முடிவு சொல்ல வேண்டும். யார் தலைமை வகித்தார்களோ அவர்கள் சொல்வது தான் முடிவானது. தலைவர் அவர்கள் தலைமை வகிக்கும்போது தலைவர் தீர்ப்பு முடிவானது. துணைத் தலைவர் தலைமை வகிக்கும்போது, அவருடைய தீர்ப்பு முடிவானது. மாற்றுத் தலைவர் தலைமை வகித்தால், மாற்றுத் தலைவருடைய தீர்ப்பு முடிவானது. ஒருவருடைய தீர்ப்புக்கு மேலே யாரும் அப்பீல் செய்ய முடியாது. ஆகவே யார் தலைமை வகித்தார்களோ அவர்கள் செய்தது சரியா, தவறா என்று நான் சொல்ல இயலாது. அது முறையும் அல்ல. அந்தப் பிரச்சினையை உறுப்பினரவர்கள் இப்போது கிளப்புவது சரியாக இருக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே அந்தப் பிரச்சினையை உறுப்பினரவர்கள் கிளப்பாமல் இருப்பது நல்லது . . .

திரு. ஆர். டி. சித்தாபதி: துணைத் தலைவரவர்களே, நான் கிளப்ப விரும்புவது . . . .

[1986 மே 3

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எதற்காகச் சொல்கிறேன் என்றால், முன்பே இந்தப் பிரச்சினையைப்பற்றி எழுப்பப்பட்டிருக்கிறது. சட்ட சபையில் ஒரு முறை 1966-ல் ஒரு இட்லி அளவு குறைந்து போய் விட்டது என்று சொல்லி ஒரு உறுப்பினர் இட்லியை எடுத்துக் காண்பித்தார். அப்போது முதலமைச்சர் அவர்கள் இட்லியைக் காண்பிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதுமாதிரி காட்ட வேண்டுமென்று சொன்னால், தலைவருடைய அறையில் அவருடைய அனுமதியைப் பெற்று, செல்லலாமென்று கருத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் தலைவர் அதற்கு அனுமதி அளிக்க மாட்டார். பொதுவான விதி, அவையில் எதையும் காண்பிக்கக்கூடாது என்பதுதான். ஒரு முறை ஒரு கம்யூனிஸ்ட் உறுப்பினர் பாம்பைக் கொண்டு வந்து விட்டார். அவர் அந்தப் பாம்பைக் கொண்டுவந்து காண்பிக்கிறேன் என்று சொல்லும்போது, அதை அனுமதிக்க இயலாது. ஆகவே உறுப்பினர்கள் என்ன பொருளைக் கொண்டு வருவார்கள், அந்தப் பொருளுக்கு என்ன அத்தாட்சி, அது சரியா, தவறா என்று பல பிரச்சினைகளுக்கு இடம் அளிக்கும் என்பதனாலே, எந்தப் பொருளையும் கொண்டுவரக் கூடாது என்பது என்னுடைய தீர்ப்பாகும். இன்னொருவர் கொடுத்த தீர்ப்புக்கு உறுப்பினரவர்கள் என்னிடத்தில் முறையீடு செய்ய முடியாது என்பதையும், அப்போது என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது என்பதையும், ஆகவே உறுப்பினரவர்கள் அதைப்பற்றிப் பேசவேண்டாமென்றும், அவர்கள் அமரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் தெரியும் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்தச் சமயத்தில் அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கான எந்தவிதமான நிலையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. மாயவன் : துணைத் தலைவரவர்களே, 'ரூலிங்' என்பது அந்த இடத்தில் அமருகிறவர்களைப் பொறுத்து மாறுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேல் முறையீடு கிடையாது. யார் இந்த அவையில் உட்கார்ந்துகொண்டு தீர்ப்பு அளிக்கிறார்களோ, அவர்கள் சொல்வதே முழுமையானது. அவர்கள் சொல்வதை எடுத்துக்கொண்டு மற்றொருவரிடத்தில் சென்று மேல் முறையீடு செய்வதற்கு இங்கு வகை கிடையாது. இங்கே துணைத் தலைவர் ஒரு தீர்ப்பு சொன்னால், அதற்கு

1986 மே 3] [மேலவைத் துணைத் தலைவர்]

மேல் முறையீடு எதுவும் கிடையாது. இன்னொரு தீர்ப்பை மாற்றுத் தலைவர் சொன்னாரென்றால், அதற்கு மேல் முறையீடு துணைத் தலைவரிடத்திலேயும், துணைத் தலைவர் செய்த காரியத்திற்கு தலைவரிடத்திலேயும் மேல் முறையீடு செய்ய இயலாது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையைப்பற்றி இப்போது எழுப்ப வேண்டாம். அன்றைக்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, நான் தங்களுடைய விவாதத்திலே பங்கு கொள்ளவில்லை. என்னுடைய விவாதத்தை முடித்தால் போதுமென்று நான் கருதுகிறேன் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தொழில் அமைச்சரவர்கள் நீண்ட நாள் சட்டமன்றத் தலைவராக இருந்தவர்கள். அவர்களுக்கு என்னைவிட அதிகமாக அதனுடைய சட்டத்தைப்பற்றித் தெரியும். ஆகவே நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு கனிம நிறுவனத்தைப் பற்றி உறுப்பினர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பல இடங்களிலே ஜியாலஜிஸ்ட்களை நியமித்திருக்கிறார்கள் ; ஆனால் பொறியாளர்களை நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். மைனிங் டிப்ளமா படித்தவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; குவாரிகளை மேற்பார்வையிட்டு காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-05)

மைனிங் லொகேஷன்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. காடுகளிலும் மலையடிவாரங்களிலும் எல்லாம் இருக்கின்றன. எனவே சுரங்கத் தொழில் படித்த இளைஞர்கள்தான் இதில் வேலை செய்கிறார்கள். அவர்களும் நல்லபடியாக வேலை செய்கிறார்கள்.

அடுத்து, கட்டப்பட்ட கட்டிடம் பற்றி பேரவையிலும் சரி மேலவையிலும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்தக் கட்டிடம் இ.இ.சி. என்கிற கம்பனியால் கட்டப்பட்டிருக்கிறது. அது உலகத்திலேயே பெரிய